| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்துதமிழகத்தைமீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்:36 நாள்:28.06.2021

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6,149 புலம் பெயர் தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட உள்ளது.***

***மாவட்ட ஆட்சித்தலைவர்***
***டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப.,அவர்கள் தகவல்.***

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (28.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை சார்பாக 10 புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் பணிவாய்ப்பை இழந்த குடும்ப அட்டை இல்லாத, புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்கள் பசியால் வாடக்கூடாது என்ற உரிய எண்ணத்தோடு அரிசி 15 கிலோ, பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ கொண்ட கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்பு (Dry Ration Kits) வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.06.2021 அன்று புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு அரிசி 15 கிலோ, பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ கொண்ட கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் (Dry Ration Kits) வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தங்கியிருக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். அவர்கள் சிறு தொழில்கள், தினக்கூலிப் பணிகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். கொரோனா நோய்த்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள அசாதரண சூழ்நிலை

காரணமாக இவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ள நிலையில் அவர்களுக்கு உதவிடும் வகையில் அரிசி 15 கிலோ, பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ கொண்ட கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்பு (Dry Ration Kits) வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் உறுதிசெய்யப்பட்ட கிருஷ்ணகிரி வட்டத்தில் 69 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், பர்கூர் வட்டத்தில் 3 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், போச்சம்பள்ளி வட்டத்தில் 46 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், ஊத்தங்கரை வட்டத்தில் 11 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், ஓசூர் வட்டத்தில் 668 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், சூளகிரி வட்டத்தில் 80 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் 904 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், அஞ்செட்டி வட்டத்தில் 2 புலம் பெயர் தொழிலாளர்கள் என மொத்தம் 1,783 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை சார்பாக 51 புலம் பெயர் தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைகள் மற்றும் தொழிலக பாதுகாப்பு சார்பாக 4,315 புலம் பெயர் தொழிலாளர்கள் என மொத்தம் 6,149 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அரிசி 15 கிலோ, பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ கொண்ட கொரோனா நிவாரண உலர் உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்பு (Dry Ration Kits) வழங்கப்பட உள்ளது.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று குறைந்து வரும் சூழ்நிலையில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஊரடங்கு பல்வேறு தளர்வுகளுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவசியமின்றி வீட்டிலிருந்து வெளியே வருவதையும், கூட்டமாக செல்வதையும் தவிர்க்க வேண்டும். தேவையான காரணத்திற்காக மட்டும் வெளியே செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும்போது தனிமனித இடைவெளியை கடைபிடித்து, முககவசம் அணிந்து, கைகளை அடிக்கடி சோப்பு/கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்களிடம் ஓசூர் ஞான தீபம் சேவை மையம் சார்பாக அரசு மருத்துவமனைக்கு தேவையான 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட தலா ரூ.55 ஆயிரம் வீதம் என மொத்தம் ரூ.3.30 இலட்சம் மதிப்பிலான 6 பிராணவாயு செறிவூட்டிகளை (Oxygen Concentrator) வழங்கினர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், தொழிலாளர் இணை ஆணையர் (சேலம்) திரு.பா.ரமேஷ், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திரு.எல்.திருநந்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், வட்டாட்சியர்கள் திரு.ஜி.ஜெய்சங்கர், திரு.குருநாதன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |